குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.178/2022

அ.சா.2

2025–ம் ஆண்டு ஜனவரி 29–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்பண்ணன் | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.17 மணி,

Accused Thangaraj Present. Advocate Mr.P.Gopal present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் போத்தனூரில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்து இறந்துபோன செல்லப்பன் என் மனைவியின் சகோதரர். கடந்த 23.10.2019 ஆம் தேதி, காலை 08.30 மணியளவில், கே.ஆர்.தோப்பூரிலிருந்து, முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில், முத்துநாயக்கன் பட்டி நோக்கி லாரி வந்தது. செல்லப்பன், போத்தனூர் – சேவகனூர் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி டி.வி.எஸ் – 50 இருசக்கர வாகனத்தில் வந்தார். நான் அப்போது, பொசவனூர் பிரிவில் நின்று கொண்டிருந்தேன். அப்போது, அந்த லாரி வேகமாக வந்தது. அப்போது சத்தம் கேட்டது, நான் திரும்பிப்பார்த்தபோது, செல்லப்பன் லாரி மோதி, அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார்.

2. அவருக்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு, அவரை பரிசோதித்துவிட்டு, அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவத்தின்போது, செல்லப்பன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின்

பதிவெண் டி.என்.27 டபிள்யூ 6801 ஆகும். விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் மற்றும் ஓட்டுநரை நான் விபத்து நடந்த அதிர்ச்சியில் கவனிக்கவில்லை.

3. மேற்படி விபத்தானது, போத்தனூர் – சேவகனூர் சாலை மற்றும் கே.ஆர்.தோப்பூர் – முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலைகள் சந்திக்கும் இடத்தில் நடந்தது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. விபத்தில் இறந்த செல்லப்பன் எனது மைத்துனர். விபத்து நடந்த அன்று காலை செல்லப்பன் எனது வீட்டிற்கு வந்து திரும்பி செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரி. சம்பவத்தின்போது, நான் ஓமலூர் செல்லும் பேருந்திற்காக காத்திருந்ததாக போலிடிசார் விசாரணையில் கூறியுள்ளளேன் என்றால் சரி.

5. சம்பவத்தின்போது, நான் இருசக்கர வாகனத்தில் கருக்கல்வாடி சென்று திரும்பியதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரி. கே.ஆர்.தோப்பூர் – முத்துநாயக்கன்பட்டி செல்லும் ரோட்டில் நான்கு சாலை சந்திப்பிற்கு முன்பு ரோட்டின் ஓரமாக நிறைய மரங்கள் உள்ளது என்றால் சரி. போத்தனூர் – நான்கு ரோடு செல்லும் வழியில் மேற்படி முத்துநாயக்கன்பட்டி முத்துநாயக்கன் பட்டி – கே.ஆர் தோப்பூர் ரோட்டில் வரும் வாகனங்களை பார்க்கமுடியாது என்றால் சரி.

6. நான், சம்பவ இடத்திலிருந்து 20 அடி தூரத்தில் இருந்தேன். நான், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. நான், சம்பவம் நடந்த பின்பு, போய் பார்த்தபோது தான் விபத்தில் காயம்பட்ட நபர் செல்லப்பன் என்று தெரியும். சம்பவ இடத்திலிருந்து சுமார் 08.40 மணிக்கு அ.சா.1–ற்கு நான் தகவல் கொடுத்தேன். விபத்தில் இறந்த செல்லப்பனை ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது நானும் உடன் சென்றேன். நான் மருத்துவமனை சென்றபோது 09.55 மணி இருக்கும்.

7. சம்பவ இடத்திற்கு அருகில் இருக்கும் நான்கு சாலைகளிலும் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. கே.ஆர்.தோப்பூர் – முத்துநாயக்கன்பட்டி ரோட்டிலும், போத்தனூர் ரோட்டிலும், சேவகனூர் ரோட்டிலும் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த செல்லப்பன் இருசக்கர வாகனத்தில் போத்தனூர் வந்தார் என்றால் சரி. அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

8. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால், அவரது இறப்பிற்கு நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.08 மணி,

ஒம்/-ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.